REGD. No. M. 6311

PHONE [illegible] 55650

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 262

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்.. அண்ணாதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)

ஆண்டு	ரூ. 24—0—0
6 மாதம்	ரூ. 12—0—0
3 மாதம்	ரூ. 6—0—0
வெளிநாடு:	
ஆண்டு	ரூ. 30—0—0
6 மாதம்	ரூ. 15—0—0
3 மாதம்	ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F.

சென்னை : சித்திரை 5உ சனி (17—4—54) ★ ★ ★ வெளியூர் : சித்திரை 6உ ஞாயிறு (18—4—54)

கடவுள் வந்த காரணம் கலக்கத்தால்!

★

அகில இந்திய எழுத்தாளர் மாநாடு, தில்லியில் கூடுகிறது. நேரு பண்டிதர் செல்கிறார்.

எழுத்தாளர், நாட்டையும் மக்கள் வாழ்வையும் எழிலோவியம் ஆக்கவல்லவர்கள்.

புரட்சிகள் பூத்திடுவதும், புதுமைகள் மலருவதும், எழுத்தாளர்கள் மக்களிடம் ஊட்டிய உணர்ச்சியால்தான்!

நேரு பண்டிதர், தலைசிறந்த எழுத்தாளர், ஆங்கிலத்தில்!

ஆங்கிலமறிந்தோர் அவருடைய திறமையைப் பாராட்டுகின்றனர் — அவர் வெளியிட்டுள்ள கருத்துக்களை. பாரெங்கும் உள்ள பகுத்தறிவாளர்கள் பொதுவாகவும், குறிப்பாக இங்கு உள்ளோரும் பாராட்டத்தான் செய்வர்.

எவ்வளவு காலமாக இருந்து வருவதானாலும், கவைக்குதவாதன, கேடு பயப்பன என்றால், நெஞ்சு உரத்துடன் அவைகளைக் கண்டித்து மக்கள் உள்ளத்திலிருந்து அவைகளைக் களைந்தெறிய வேண்டும்.

அந்த நெஞ்சு உரம் நேரு பண்டிதருக்கு இருந்தது!— ஆமாம், இருந்தது!!

அதை எடுத்துக்காட்டவே பண்டிதரின் 'சுய சரிதம்,' 'திருமகளுக்குத் தீட்டிய கடிதங்கள்' எனும் ஏடுகளிலிருந்து, கடவுள், மதம், இவை குறித்து எழுத்தாளர் நேரு வெளியிட்ட கருத்துக்களை எடுத்துக்காட்டியிருக்கிறோம்.

அந்த நேருவைக் காண்கிறோம், பெருமை அடைகிறோம்!

இன்றைய நேருவையும் பார்க்கிறோம், பெருமூச்செறிகிறோம்!

சாதாரணமாக, எழுத்தாளர்களில் பெரும்பாலோர் எடுத்து எழுத அச்சப்படும் கடவுள், மதம் எனும் இரு தத்துவங்களை, நேரு பண்டிதர் எவ்வண்ணம், அலசிக் காட்டுகிறார் என்பதையும் தெரிந்து கொள்ளுங்கள்!

அவர் ஆட்சியிலே, நாட்டிலே நடைபெற்று வண்ணமிருக்கும் கும்பமேளாக்களையும் நினைவிற்குக் கொண்டு வாருங்கள்.

தீப்பொறி பறக்கும் அவருடைய எழுத்துக்களையும் பாருங்கள்! எழுத்தாளர் மாநாடு கூடும் தில்லித்தலத்திலேயும், பிற தலங்களிலேயும் இன்றும் நடைபெற்றுவரும், சீரழிவான செயல்களையும் எண்ணிப்பாருங்கள்!!

நாட்டைத் திருத்த, சமூகத்திலே புதுமை பூத்திட, பழைய நேரு, மீண்டும் தோன்ற மாட்டாரா, என்று நாம் எண்ணுகிறோம்—அந்த

—:o:—

மக்களின் அச்சத்தால் பிறந்ததே மதம்!

கருத்தைக் கெடுக்கும்; முற்போக்கைத் தடுக்கும்!

செத்த பிறகு சிவலோகமா, வைகுந்தமா என்பது பற்றி கவலை இல்லை!

அகம்பாவம், பலாத்காரம், அறியாமை மதம் பெற்ற குழவிகள்!

நேருவின் பகுத்தறிவு பரணி

நினைப்பே, இதனை வெளியிடக் காரணம்.

எழுத்தாளர் உலகு. அவர் தந்த கருத்துரைகளைக் கண்டு, பயன் பெற்று, நாட்டுக்கும் பயனளிக்க வேண்டும்.

ஆனால், எச்சரிக்கிறோம்—

இன்றைய நேருவின் போக்கை முன்மாதிரியாகக் கொண்டு விடாதீர்கள்!

இங்கு, இன்று நாம் காட்டுவது, அந்த நாள் நேரு பண்டிதரை!!

★

ஆண்டவனுக்கு மக்கள் தந்த மதிப்பு!

"ஆதி காலத்து மனிதர்கள் எதைக் கண்டாலும் பயந்து கொண்டு, தங்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்கள் எல்லாம் தெய்வங்களின் கோபத்தாலும் பொறாமையாலும் ஏற்பட்டன வென நினைத்தார்கள் என்று நான் உனக்கு சென்ற கடிதத்தில் சொன்னேன். காடுகளிலும் மலைகளிலும் நதிகளிலும் மேகங்களிலும் மற்ற எல்லா இடங்களிலும் இம்மாதிரியான தெய்வங்கள் இருப்பதாக எண்ணினார்கள் கடவுள் நல்ல குணமுடையவர் என்றும், கருணையுடையவரென்றும் அவர்கள் எண்ணவில்லை. மிகவும் முன்கோபமும், சண்டை பிடிக்கும் குணமும் உள்ளவர் கடவுள் என்று எண்ணினார்கள். அவர்கள் கடவுளின் கோபத்திற்கு அஞ்சி, அவருக்கு அடிக்கடி ஆகாரங்களை லஞ்சம் மாதிரி கொடுத்துப் பூஜித்து வந்தனர். சில சமயங்களில் பூகம்பமோ, வெள்ளமோ, ஏதாவது கொள்ளை நோயோ ஏற்பட்டு அதனால் பல ஜனங்கள் மாண்டுபோனால் அவர்கள் மிகவும் பயப்பட்டார்கள். கடவுள் தங்கள்மேல் கோபித்துக்கொண்டு இங்ஙனம் செய்கிறார் என்று எண்ணினார்கள். ஆகவே, அக்கடவுளைச் சாந்தப்படுத்தவும், திருப்தி செய்யவும் சில சமயங்களில் மனிதர்களையும் பெண்களையும் தங்கள் குழந்தைகளையுங்கூடக் கொன்று அத்தெய்வங்களுக்கு பலி கொடுப்பார்கள். இது வெறுக்கத்தக்கதும் அநாகரீகமானதுமான ஒரு வழக்கம் ஆனால் பயப்படும் ஒரு மனிதன் எதையும் செய்யத் துணிவான்.

உலகத்தில் மதம் அல்லது சமயம் இப்படித்தான் உண்டாகியிருக்க வேண்டுமென்று தெரிகிறது. ஆகவே, முதல் முதலில், பயத்தினால் மதம் உண்டாயிற்று. பயந்துகொண்டு செய்யும் எக்காரியமும் தீதே.

சமயம் என்றால் இன்றைக்கும் பலர் அஞ்சுகின்றனர். மனத்திற்கு தோன்றும் பல தெய்வங்களை திருப்தி செய்வதற்காகக் கோவில்களில் பூஜை செய்தும், மிருகங்களைக் கொன்றும் வருகிறார்கள்.

★

பயத்தால் விளைந்த விபரீதம்

கோயில்கள் என்பவை என்ன, அவற்றில் பூஜை செய்து வந்த பூஜகர்கள் யார் என்பவற்றைப் பற்றிக் கவனிப்போம். முன் ஒரு கடிதத்தில், பூர்வீக மனிதர்கள் தங்கள் அறிவீனத்தால் தாங்கள் அறியமுடியாத விஷயங்களைக் கண்டு பயந்தார்கள் என்றும், அதனால் பல தெய்வங்களைத் தொழ ஆரம்பித்தார்கள் என்றும் சொன்னேன். ஆறு, மலை, சூரியன், மரம், மிருகங்கள், தாங்கள் கண்ணால் பார்க்க முடியாத பேய், பிசாசு என்பவைகளை எல்லாம் தேவன் அல்லது தேவி என்று பாவித்து வந்தார்கள். அவர்களுக்கு ஏற்பட்டிருந்த பயத்தினால், கடவுள் தங்களுக்கு எப்பொழுதும் துன்பத்தையும், கஷ்டத்தையும் உண்டாக்கித் தண்டித்து வந்தாரென்று நினைத்தார்கள். தங்களைப் போலவே, தங்கள் தெய்வங்களும் கொடூரமானவை என்று எண்ணி அவைகளைத் திருப்தி செய்து சாந்தப்படுத்தப் பலவிதமான பலிகொடுத்து வந்தனர்.

★

மதத்தின் மாயத் தோற்றம்

"இந்தியா மத பக்தியுள்ள நாடாகக் கருதப்படுகின்றது. ஹிந்துக்களும், முஸ்லீம்களும், சீக்கியர்களும் தங்களுடைய மதங்களின் பேரால் கர்வமடைகின்றார்கள். அந்த கர்வம் உண்மையென்று குஜ-பரிசித்த மண்டைகளை உடைக்கிறார்கள். இந்தியாவிலும் சரி, வேறு எங்கேயும் சரி, மதம் என்று கட்டுப்பாடாக வகுக்கப்பட்டு அனுஷ்டிக்கப்பட்டு வரும் ஏற்பாட்டில் எனக்கு வெறுப்பு. அதை நான் அடிக்கடி கண்டித்திருக்கிறேன். அதை அடியோடு ஒழித்துவிட வேண்டுமென்பது என் ஆசை. மதம் என்றால் குருட்டு நம்பிக்கை, பிற்போக்கு, ஆராய்ச்சிக்கு அடங்காத கொள்கை, வெறி, மூடபக்தி, சுரண்டல், பரம்பரை பாத்தியப் பாதுகாப்பு என்று எனக்கு எப்பொழுதுமே தோற்றும்."

★

அறிவுக்கு மதம் ஒரு விரோதி!

"செத்த பிறகு சிவலோகமா, வைகுந்தமா என்பதைப் பற்றி எனக்குக் கொஞ்சம்கூட சிரத்தையே இல்லை. என்னுடைய உள்ளத்தில் நிறைந்து நிற்பதற்குப் போதுமான அளவில் ஏராளமான பிரச்சினைகள் இந்த வாழ்க்கையிலே இருக்கின்றன சீன சம்பிரதாயமே எனக்கும் பிடித்தமானதாகும். சீனர்களுடைய நோக்கம் அறத்தைத் தழுவியது; மதத்தை தழுவியதல்ல. எந்த முறையைப் பின்பற்றி வாழ்க்கையை இன்புற நடத்துவதென்பதிலேதான் எனக்கு சிரத்தை. வாழ்க்கையில் துறவு பூணுவது எனக்குப் பிடித்தம் இல்லை. வாழ்க்கையை அறிந்து அதை ஏற்று அதற்குத் தக்கபடி நடந்து அதைச் சீர்திருத்துவதிலேதான் எனக்கு விருப்பம். ஆனால் சாதாரணமாக மதம் என்பது இந்த உலகத்தைப் பற்றியே கவலைப்படுவதில்லை. தெளிவாக யோசனை செய்யும் சக்திக்கு மதம் விரோதியாயிருக்கும். மதத்தை ஏற்பதென்றால் ஒரு கேள்வியும் கேட்காமல் மாற்ற முடியாத சில சூத்திரங்களையும் கட்டுப்பாடு விதிகளையும் ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிருக்கிறது. உணர்ச்சி வெறி, பரம்பரை முதலியவைகளால் ஆக்கப்பட்ட கட்டுப்பாடு விதிகள் மதத்துக்கும் அத்யாத்மிகத் தன்மைக்கும் வெகு தூரம் என்பது என் கருத்து. மதத்துக்கும் ஆன்ம வளர்ச்சிக்கும் வெகு தூரம், கண்ணுக்குத் தெரிகிறவைகளை வேண்டுமென்றே பார்க்காமல், மதம் கண்ணை மூடிக்கொள்கிறது. ஏனென்றால், மதம் உபதேசம் செய்யும் கட்டுப்பாடு விதிகளுக்கு உலகில் நடைபெறும் நிகழ்ச்சிகளினால், ஆபத்து வந்துவிடுமோ என்று மதம் நிகழ்ச்சிகளைப் பார்ப்பதில்லை போலும்! மதம் குறுகிய நோக்கம் கொண்டது. அதற்கு மாறுபட்ட அபிப்பிராயங்களையும் மனப்பான்மைகளையும் கண்டு அதனால் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது. அது தன்னை மிகைப்படுத்திக் கொள்ளும் தன்மை கொண்டது. அகம்பாவம் கொண்டது. சுயநலக்காரர்களும் சமயோசிதவாதிகளும் தங்கள் நலத்திற்காக தன்னை உபயோகப்படுத்திக் கொள்ள சாதகமாக விருக்கிறது."

★

மமதையாளனுக்கு மதம் ஒரு அரண்

"மதப்பற்று கொண்ட மனப்பான்மையினால், ஒரு நாட்டின் மக்களின் முற்போக்கு மிகுதியாக தடைப்பட்டு விடுகின்றது என்பது பொருளாகும். முற்போக்கு என்பதை இந்த உலக அளவை கொண்டு மதிப்பிடுகின்றேன். இந்த வாழ்வுக்கும் பின்னே நேருவதைக் கொண்டு முற்போக்கைக் குறிப்பிடவே இல்லை. மதம் என்றால் கடவுளைக் காணுதல் என்று வழக்கமாகச் சொல்லப்படுகிறது. ஜனசமூக நன்மையைக் காட்டிலும் தன்னுடைய சொந்த மோட்சத்தைப் பற்றியே மதப் பற்று கொண்ட மனிதன், அதிகமாகக் கவலைப்படுகின்

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

சென்னை 17—4—54 சனி

இங்கு பெவான் இல்லையே!

"குளவி கொட்டித் தன் நிறமாக்கும்" என்றோர் பழமொழி உண்டு. கூடிக் குடி கெடுப்போர் எங்கும் இருக்கத்தான் செய்கிறார்கள்; ஆனால், எளிதிலே அவர்களைக் கண்டு பிடித்துவிட முடியாது; வேடம் அவ்வளவு மனமயக்கம் தரும். அமெரிக்காவின் 'ஜனநாயக'ப் பேச்சு இத்தகைய வேடம் என்பதை, பொதுமக்கள் மேலும் மேலும் தெளிவாகப் புரிந்துகொண்டு வருகிறார்கள்—ஆட்சியாளர்கள் மட்டுமே, இன்னமும் அமெரிக்க அபின் மயக்கத்திலிருந்து விடுபடக் காணோம்.

டல்லஸ் டில்லி வருகிறார்! இலண்டன், பாரிஸ், சென்று விட்டு வென்றுவிட்டு, சமாதானச் சூழ்நிலையைக் கொன்று விட்டு, மேலும் இரை தேட டில்லி வருகிறார்!

டல்லஸ், போர் வெறி பிடித்து அலைகிறார் என்பதை அமெரிக்காவிலேயே இன்று பலர் வெளிப்படையாகவே பேசுகின்றனர்.

கம்யூனிஸ்டு ஆதிக்கத்தை அழிப்பதற்காகக் கங்கணம் கட்டிக்கொண்டிருப்பதாகக் கதைத்துக்கொண்டு, புதியதோர் போருக்கு வித்திட்டு வருகிறார் டல்லஸ், என்பது விளக்கமாகி விட்டது.

அமெரிக்காவுக்குள்ளே மக் ஆர்தி என்பவர், மனித வேட்டையாடி வருகிறார், கம்யூனிஸ்டுகளை அழித்தொழிக்க!—டல்லஸ் உலகின் பல நாடுகளிலே 'பவனி' வருகிறார், கம்யூனிச ஆபத்தை ஒழிக்க, அனைவரும் வாரீர் என்று பாடியவண்ணம்!

முன்னாள் தலைவர் ட்ரூமன் அவர்களாலேயே, சகித்துக் கொள்ள முடியவில்லை, மக் ஆர்தியின் போக்கை—பலமாகக் கண்டித்திருக்கிறார்.

கண் சிவந்திருந்தாலும், சிகப்பு 'மை'யை எழுத உபயோகித்தாலும், மக் ஆர்தி மிரளுகிறார்; சீறுகிறார்; பாய்கிறார்; சித்திரவதை செய்கிறார்.

டல்லஸ், இந்தத் துறையை மக் ஆர்தியிடம் ஒப்படைத்துவிட்டு, நோயாளி, கடனாளி என்ற நிலையில் உள்ள நாடுகளைக் கண்டறிந்து, டாலர் ருசி காட்டி, பின்னேடும் பிள்ளைகளாக்கி வருகிறார்! இப்போது டில்லி வருகிறார்.

பாதுகாப்புத் திட்டங்கள் பலப்பலவற்றை அமெரிக்கா அமைத்துக்கொண்டு வருகிறது; அவை ஒவ்வொன்றும், சோவியத்தைச் சூழ்ந்துகொண்டு தாக்கவல்ல வளைவுகள் என்ற முறையிலேயே உள்ளன. இந்த வளைவுகளில் சேர்வதற்காக, பல நாடுகளுக்கு, பரிவு காட்டியும், உறவு கொண்டாடியும், பணத்தை வாரி இறைக்கிறது; இந்தியாவும் டாலர் பருகி, பாதிப் போதை பெற்றுவிட்டிருக்கிறது; இந்தச் சமயமாகப் பார்த்து, டல்லஸ் டில்லி வருகிறார்.

கோடிக்கணக்கான டாலர்களைக் கொட்டிக் காட்டிவிட்டு, ஆயிரக்கணக்கான அமெரிக்கர்களை பல துறைகளில் புகுத்தி வைத்துவிட்டு, அமெரிக்காவின் நிபுணர் பண்ணையிலிருந்து நாற்றுக்கணக்கானவர்களை இங்கு இறக்குமதி செய்துவிட்டு, பிறகு, டல்லஸ் டில்லி வருகிறார்!

இங்கு வருவதற்கு முன்னால், பயங்கரமான வெடி குண்டு, அணுகுண்டைவிட அதிகமான அழிவுச் சக்தி கொண்டதை, வெடிக்க வைத்துக் காட்டியிருக்கிறார்—அந்தப் பேரிரைச்சலைக் கீதமாகவும், புகைப் படலத்தைப் பொன்னாடையாகப் போர்த்துக் கொண்டும், டல்லஸ் டில்லி வருகிறார்.

பல்வேறு நாட்டு மக்களாட்சித் தலைவர்கள், 'இந்தப் பயங்கர வெடிகுண்டு உலகை அழிக்கக்கூடியது,' என்று எச்சரிக்கையும், கண்டனமும் தெரிவிக்கின்றனர். மார்க்கத் தலைவர்களும், கல்வி நிபுணர்களும், மக்கள் மன்றங்களும், விஞ்ஞானக்கூட்டத்தினரும் 'வேண்டாம், இந்த விபரீதம்,' என்று எச்சரித்தும், அசைந்து கொடுக்காமல், அப்படியா என்றும் கேட்காமல், இவ்வளவு 'பீதி'யைக் கிளப்பும் வலிவு நம்மிடம் இருக்கிறதே என்ற மமதையுடன், டல்லஸ் வருகிறார்!

கொரியாவிலே தகராறு தீரவில்லை! சீனாவின் பிரச்சினையை நாணயமாகக் கவனிக்கவில்லை! இந்தோ-சீனாவிலோ இரத்த ஆறு ஓடுகிறது!

உலகிலே சமாதானம் நிலவ வேண்டும்; போர் வெறியர்கள் அடக்கப்பட வேண்டும்; பயங்கரப் போர்க் கருவிகள் அழிக்கப்பட வேண்டும் அல்லது கட்டுப்படுத்தப்பட வேண்டும்—என்று உலகிலே, முற்போக்காளர்கள், மனித மாண்பினை மதிப்பவர்கள் அனைவரும் வேண்டிக்கொள்கிறார்கள்.

கத்தோலிக்கப் போப்பும், கம்யூனிஸ்டு மாலென்கோவும் இந்தப் போர்ப் பயங்கரத்தை ஒழித்திட முன்வரக்கூடும் என்றுகூடத் தெரிகிறது—எனினும், டல்லஸ், எதைக் குறித்தும் கவலைப்படாமல், பலி ஆடுகள் தேடித் திரியும் பூசாரி போல, நாடு பல செல்கிறார்; நட்பு முறை பேசுகிறார்; கூட்டு முறை கூறுகிறார்; கொடுமையானதோர் போருக்குத் தூபம் போடுகிறார்! டில்லி வருகிறார்!

இதேபோது, எளிதாக ஏய்த்துவிட இயலும் என்ற நினைப்பில், ஜினிவா நகரில், ஐந்து வல்லரசுகள் மாநாடு நடத்தி, 'போர் ஒழிப்பு எனும் புனிதக் கொள்கை பற்றிப் பேசி முடிவு செய்யலாம்,' என்றும் அமெரிக்கா கூறுகிறது.

'போர் பரவலாகாது; புதுப் போரும் எழலாகாது,' என்று பேசிக்கொண்டே, சீனக் குடி அரசுக்கு எதிராக, சியாங்கைத் தூண்டியவண்ணம் இருக்கிறது.

ஜனநாயகத்திலும், உரிமையிலும், விடுதலை வேட்கையிலும் பற்று உண்டு; நம்பிக்கை உண்டு;—என்று பேசிக்கொண்டே, பிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்து விடுபட கடந்த ஆறாண்டுகளாக விடுதலைப் போர் நடாத்திவரும் வீர மக்களைக் கொன்று குவிக்க, எதேச்சாதிகாரம் பிரான்சுக்கு ஏராளமான வெடி விமானங்களைத் தருகிறது. இந்த அமெரிக்கா அனுப்பிவைக்கும் டல்லஸ், டில்லி வருகிறார்!

தென் கிழக்கு பசிபிக் வட்டாரத்தை ஒரு பாதுகாப்பு வளையம் ஆக்குவது என்பது, இப்போது டல்லஸ் கொண்டுள்ள திட்டம். இந்த வளையம் அமைக்கப்பட்டால், இந்த வட்டாரத்திலே, கம்யூனிஸ்டு அபாயம் ஏற்படாதாம்!

கம்யூனிசம் எங்கோ ஓர் குறிப்பிட்ட இடத்திலிருந்து கிளம்பும் படையோலக் கருதிக்கொண்டு, அந்தப் படையைத் தடுத்திட, ஆங்காங்கு பாதுகாப்பு அரண்கள் கட்டுகிற பொருளற்ற, பயனற்ற திட்டத்தை அமெரிக்கா வலியுறுத்துகிறது.

கம்யூனிசம், ஏழையின் கண்ணீரிலிருந்து பிறக்கிறது—எங்கும்—எப்போதும்!

அதைத் தடுக்க—தென்கிழக்கு பசிபிக் திட்டம், அட்லாண்டிக் திட்டம், 'நேடோ' திட்டம் — என்று, எதை எதையோ தீட்டிக் காணப்போவது என்ன?

எல்லோரையும் திரட்டி, சோவியத்மீது ஏவி விட்டு, பயங்கரமான அழிவை உண்டாக்குவது எனும் வெறி உணர்ச்சி தவிர, வேறு என்ன பொருள் உண்டு இந்த ஏற்பாடுகளுக்கு?

பல நாடுகள், அமெரிக்காவின் போக்கு மூட்டிடும் ஆபத்தை அறிந்துகொண்டுதான் உள்ளன; ஆனால், டாலர் மயக்கம் இலேசானதா! சாய்கின்றன!!

இந்த 'வெற்றிகளை'க் கண்டு உற்சாகமும், நம்பிக்கையும் கொண்ட டல்லஸ், தென்கிழக்கு பசிபிக் வளையத்தை ஆதரிக்கும்படி இந்தியாவை அழைக்க வருகிறார்.

'அழைக்கலாம்,' என்று அவருக்கு நம்பிக்கை பிறந்திருப்பதற்குக் காரணம், நேரு சர்க்கார் காட்டிவரும் அமெரிக்க மோகம்தான்!

ஏராளமான பணம் பெற்றுக் கொண்டிருக்கிற நாடு இந்தியா; அதன் அணைக்கட்டுகளில், தேக்கங்களில், தொழிலகங்களில், நிபுணர் கூடங்களில், டாலர் இருக்கிறது; அமெரிக்கரும் உள்ளனர்; எனவே, 'நமது அழைப்பை அலட்சியப் படுத்திட முடியாது,' என்று எண்ணியதால்தான் துணிந்து டில்லி வருகிறார், டல்லஸ்!

பக்கத்திலே உள்ள பாகிஸ்தானுக்கு போர்க் கருவிகள் உதவி, அதைக் காட்டி, கண் சிமிட்டி, 'காரியம் மிஞ்சிவிடும்; இதிலே கையொப்பமிடுக!' என்று மிரட்டி, வெற்றி பெறலாம் என்று டல்லஸ் வருகிறார்!

இங்கு, முதலாளித்துவ முறையைக் கட்டிக் காப்பாற்றும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட நிலை காங்கிரசுக்கு ஏற்பட்டுவிட்டது — பொருளாதார அமைப்பை, புரட்சிகரமாக மாற்றி அமைக்க நேரு சர்க்காரால் இனி இயலாது என்று கூறத்தக்க அளவுக்கு, நிலைமை வளர்ந்து விட்டது—எனவே, நேரு சர்க்கார், கம்யூனிஸ்டு கட்சியை மட்டுமல்ல கம்யூனிசத்தை ஆதரிக்கும் எந்தக் கட்சியையும் ஒழித்துக் கட்டி, முதலாளித்துவ முறையை ஒழுங்காக, ஒய்யாரமாக வாழச் செய்ய வேண்டும் என்ற போக்கைக் கொண்டு விட்டது.

இதைக் கண்டே, அமெரிக்கா, சியாங்கே ஷேக் சரிந்து போன சமயத்தில், இப்படி ஒரு புது நண்பன் கிடைத்தானே; கர்த்தனின் கிருபையே கிருபை!' என்று மகிழ்ந்து, தேவாலயம் சென்று துதிபாடி, 'மனதாலும், வாக்காலும், காயத்தாலும் இம்சையைத் துளியும் செய்ய மாட்டேன்,' என்று உபதேசியார் கூறும் நன்மொழிக்கு 'ஆமென்' கூறி விட்டு, உலகை இரத்தக் காடாக்கும் காரியத்திலே, 'உன் பங்கு என்ன,' என்று கேட்க டில்லிக்கு டல்லசை அனுப்பி இருக்கிறது.

அமெரிக்காவிடம், விளைவு பற்றிக் கவலைப்படாமல் பெரும் பொருளை உதவியாகவும், கடனாகவும் பெற்றுக் கொண்டதன் 'பலன்' இப்போதாவது புரிகிறதோ இல்லையோ, ஆளவந்தார்களுக்கு!

"உள்நாட்டு ரீதியிலே கம்யூனிசத்தை எதிர்க்கிறது இந்தியா; ஆனால், வெளிநாட்டுத் துறையிலே, கம்யூனிஸ்டுகளைத் தட்டிக் கொடுத்து, நட்பு கொண்டாடுகிறது; எனவே, இன்னமும் கண்ணை மூடிக்கொண்டு இந்தியாவுக்குப் பண உதவி தருவது பைத்தியக்காரத்தனமாகும்," என்று அமெரிக்கத் தலைவர்களில், மனதில் பட்டதை மூடிவைத்திடத் தெரியாதவர்கள், பேசிவருகின்றனர். டல்லஸ் அப்படிப்பட்டவரல்ல! 'இரத்தக் கறை படிந்த கரம், புன்னகை தவழும் முகம்,' என்பதுபோல, நடிக்கும் ஆற்றல் படைத்தவர்!

பொறுத்துப் பொறுத்துப் பார்த்து, சகிக்க முடியாமல் பிரிட்டனில், தொழிற் கட்சித் தலைவர்களில் முக்கியமானவரான பெவான், பொறி பறக்கப் பேசி, அமெரிக்காவின் போக்கைக் கண்டித்துவிட்டார். பிரிட்டிஷ் தொழிற் கட்சியிலேயே இதனால் பெரும் பிளவு உண்டாகக்கூடும் என்கிறார்கள்.

'தென் கிழக்கு பசிபிக் திட்டம் தேவையற்றது; தீமை பயப்பது; இது சமாதானத்துக்காகச் செய்யப்படும் ஏற்பாடு அல்ல; சமர் மூட்டும் சதி; இதிலே சேரக்கூடாது,' என்று பெவான் பேசுகிறார்.

'சீனாவை ஏற்றுக் கொள்ள வேண்டும்,' என்று வலியுறுத்துகிறார்.

'இந்தோ - சீனப் போரில் அமெரிக்கா நுழைந்து, பயத்தோடும் பிரெஞ்சு ஏகாதிபத்தியத்துக்குத் துணை புரிவது, மன்னிக்க முடியாத பாதகம்,' என்று இடித்துரைக்கிறார்.

'இந்தோ - சீனாவில் கம்யூனிஸ்டு ஆட்சி ஏற்படவிடக் கூடாது' என்று கூற, அமெரிக்காவுக்காகட்டும், வேறெந்த நாட்டுக்குத்தானாகட்டும், உரிமை ஏது? அந்த நாட்டு மக்கள், கம்யூனிஸ்டு ஆட்சியை விரும்பி அமைத்துக்கொண்டால், சரி என்று கூறிவிட வேண்டுமே தவிர, குறுக்கே நிற்பது, எப்படி நியாயமாகும்?' என்று வாதிடுகிறார்.

கெட்ட நினைப்புடன் காரியமாற்றும் அமெரிக்காவிடம், பிரிட்டன் சரணாகதியாவதை வன்மையாகக் கண்டித்துவிட்டு, "போர் வெறிகொண்டு அலைவது என்று அமெரிக்கா தீர்மானித்து விட்டால், அதை அதன் போக்கிலே விட்டுவிட்டு, 'வந்ததை அனுபவி,' என்று கூறிவிட வேண்டுமே தவிர, அதன் தாளத்துக்கு ஏற்றபடி பிரிட்டன் ஏன் ஆட வேண்டும்?" என்று கேட்கிறார்.

டல்லஸ் டில்லி வருகிறார்—ஆனால், பெவான் இங்கு இல்லையே!!

ஆப்பிரிக்காவில் நிறவெறி

பல்கலைக் கழகத்திலும் எதிரொலிக்கிறது

கேப்டவுன், ஏப். 15—

ஆப்பிரிக்காவில் வெள்ளையர் நடத்தும் 'கறுப்பர் ஒழிப்பு' முயற்சியில் பல்கலைக் கழகங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

ஜோகன்ஸ்பர்க் பல்கலைக் கழகத்தில் நடக்கப்போகும் விழா மண்டபத்தில் வெள்ளை, கறுப்பு மாணவர்களுக்கு தனித்தனி இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நிற பேதத்தை வலியுறுத்தும் இந்தத் திட்டத்தைக் கைவிடுமாறு மாணவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். மேலும் இந்தத் திட்டம் கைவிடப்படாத வரை பல்கலைக் கழக விழாக்களில் கலந்து கொள்வதில்லை என்று பெருவாரியான மாணவர்கள் முடிவு செய்திருக்கின்றனர்.

சித்தூர் எல்லைத் தகராறு

எல்லைக் கமிஷனுக்கு விண்ணப்பம்

சென்னை அரசாங்கம் தயாரிக்கிறது

சென்னை, ஏப். 16—

சென்னை மாநிலத்தின் எல்லைக் கோடுகளை மாற்றியமைத்து, தமிழ்ப் பகுதிகளை சென்னையோடு சேர்க்கும் விண்ணப்பத்தை எல்லைக் கமிஷனுக்கு சமர்ப்பிப்பதென இன்று கூடிய மந்திரி சபை முடிவு செய்துள்ளது.

இதற்கான புள்ளி விபரங்களைச் சேகரிக்க ஏற்பாடுகளையும் செய்திருக்கிறது.

ஆச்சாரியாரின் கல்வித் திட்டம்

புதிய மந்திரி சபை ஆலோசனை

சென்னை, ஏப். 16—

இன்று காலை கூடிய காமராசரின் மந்திரி சபை, ஆச்சாரியாரின் புதிய கல்வித் திட்டத்தைப் பற்றி ஆலோசித்தது. நீண்ட நேர விவாதத்திற்குப் பின் முடிவெதும் காணாமல் கலைந்தது.

அடுத்த வாரத்தில் கூடப்போகும் மந்திரி சபைக் கூட்டத்தில் மேலும் இதுபற்றி விவாதிப்பர் என்று தெரிகிறது.

கடவுளின் அலுவல் என்ன?

(4-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

"நம்முடைய அரசியலில், இந்த மத வுணர்ச்சி புகுந்து வளர்ந்து வருவதில் எனக்குக் கவலை சிலசமயங்களில் ஏற்பட்டது, எனக்கு இந்த மதப் பிரவேசம் பிடிக்கவேயில்லை. மௌல்விகளும், பண்டிதர்களும், சுவாமிகளும் பிரசங்க மேடைகளில் சொல்லிவந்த பல விஷயங்கள் கெடுதியை விளைவிக்கக் கூடியதாக எனக்குத் தோன்றின. அந்தப் பிரசங்கங்களில் நாட்டின உண்மையான சரித்திரத்தையும், பொருளாதாரச் சரித்திரத்தையும், சமூக ஏற்பாட்டையும் திரித்துக் கூறினார்கள். எனவே, அவர்கள் எதையும் தெளிவாக யோசிப்பதற்கு இடமில்லாமல் செய்துவிட்டார்கள். காந்திஜீ உபயோகப்படுத்திவந்த சில பதங்கள்கூட என்னுடைய காதுகளில் அபசுரமாகப் பட்டன. அவர் "ராமராஜ்யம்" திரும்பவும் ஏற்படவேண்டும் என்று சொல்லும்பொழுது அது எனக்கு மத வேதனையை உண்டாக்கும். ஆனால், நான் என்ன செய்ய முடியும்? அதைத் தடுக்க முடியுமா?"

★

'பாப'த்துக்கு தண்டனையா பூகம்பம்?

"பூகம்பம் நேர்ந்தது, "தீண்டாமைப் பாவத்துக்குத் தண்டனையாகும்" என்று காந்திஜீ சொன்னதாகப் படித்தேன்; அப்படியே ஸ்தம்பித்துப் போனேன். இது திகைக்கச் செய்யும் கருத்து ஆகும். இத்தகைய கருத்து அபத்தம் என்று ரவீந்திரநாத் தாகூர், காந்திஜீக்கு மறுமொழி அளித்ததில் எனக்கு மிகுதியும் சந்தோஷம். தாகூரின் மறுமொழி முற்றிலும் எனக்கு உடன்பாடு. விஞ்ஞான ஆராய்ச்சிக்கு இதைக் காட்டிலும் எதிரிடையான கருத்தைக் கற்பனை செய்வதே கஷ்டமான வேலையாகும்."

"மனதிலே திகில் ஏற்பட்டால் அஜீரணம் உண்டாகலாம்; அல்லது அதைக் காட்டிலும் கேவலமான தொந்தரவு ஒருவருடைய உடலுக்கு நேரலாம்; ஆனால், மனித வர்க்கத்தின் பழக்க வழக்கத்தினால், அல்லது குறைபாட்டினால் பூமிக்குள்ளே பூகம்பம் ஏற்படுமென்று சொல்லுவது மிகவும் பொறுக்க முடியாத சங்கதி ஆகும். பாவம் தெய்வத்தின் கோபம், அண்டங்களிலே மனிதனுக்கு சிறப்பான ஒரு பிரதான்யம்—இத்தகைய கருத்துக்கள் மத்திய காலத்தைச் சேர்ந்ததாகும்; ஐரோப்பாவிலே மக்களை தீயில் உரித்துத் தண்டித்தார்களே அந்தக் காலத்தைச் சேர்ந்ததாகும். ஜார்டேனோ ப்ரூனோ அவர்களை, அவரது விஞ்ஞான ஆராய்ச்சிக்காக கொளுத்தி. இன்னும் பல விஞ்ஞான சாஸ்திர பண்டிதர்களை மந்திரவாதிகள் என்று தூக்கிவிட்டார்களே அந்தக் காலத்தைச் சேர்ந்ததாகும்."

"பூகம்பம் மனிதர்களுடைய பாபத்துக்கு தெய்வீக தண்டனையாயின் நாம் என்ன பாபத்துக்காக தண்டிக்கப்படுகிறோம் என்று எவ்வாறு கண்டு கொள்வது? ஏனென்றால், அந்தோ! பிராயச்சித்தம் பண்ணும்படியான பல பாபங்கள் நம்மிடம் இருக்கின்றனவே! ஒவ்வொருவரும் ஏதோ சமாதானம் சொல்லிவிடலாம். அந்நிய ஆட்சிக்கு ஆட்பட்டுக் கிடப்பதால் நாம் தண்டிக்கப்பட்டிருக்கலாம்; அல்லது அநியாயமான ஜனசமூகத் திட்டத்தைச் சகித்துக்கொண்டிருப்பதற்காக தண்டிக்கப்பட்டிருக்கலாம். தர்பங்கா மகாராஜா ஏராளமான பூமியாளர்; சொத்துடையவர்; பூகம்பத்தால் அவருக்கு நேர்ந்த சொத்து நஷ்டம் இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது; ஆகவே பூகம்பம் ஜமீன்தாரித் திட்டத்துக்கு தண்டனை என்றும் நாம் சொல்லலாம்."

"அப்படிச் சொல்லுவது ஒருவாறு பொருத்தமாகக் கூட இருக்கலாம் தென்னிந்திய ஜனங்களின் மத்தியிலே பரவி நிற்கும் தீண்டாமைப் பாவங்களுக்காக நிரபராதிகளான பீகார் மாகாணவாசிகள் தண்டிக்கப்பட வேண்டுமா? தீண்டாமை நாடாகிய தென்னிந்தியாவுக்கே பூகம்பம் நேரக் கூடாதா? சட்ட மறுப்புக்காக பூகம்பம் தெய்வ தண்டனையாகும் என்று பிரிட்டிஷ் அரசாங்கம் சொல்லக்கூடும். ஏனென்றால் பூகம்பத்தினால் மிகுதியும் சேதமடைந்த வடபீகாரில்தான் சட்ட மறுப்பு சுதந்திர இயக்கம் தீவிரமாக நடைபெற்றது."

"எல்லை இல்லாமல் இந்த மாதிரி நாம் குறிப்பிட்டுக் கொண்டே போகலாம். அடுத்தபடியாக ஒரு கேள்வி எழுகின்றது. கடவுளின் அலுவல்களில் தலையிட்டுக் கொண்டு, ஆண்டவனுடைய தண்டனையின் கொடுமையை நமது ஜீவகாருண்ய முயற்சிகளால் குறைக்க நாம் ஏன் முயற்சி செய்ய வேண்டும்? ஆண்டவன் இத்தகைய கொடுமையான நகைப்பு வேலையை நம்மிடம் ஏன் செய்ய வேண்டும்? அவர் நம்மைக் குறைகளோடு படைக்கிறார்; நம்மைச் சுற்றி நாலா பக்கத்திலும் மோசம், மாச்சரியம் முதலிய தூண்டுதல்களையும், அச்சங்களையும் சிருஷ்டி செய்கிறார்; துயரம் நிறைந்த குரூரமான உலகத்தைப் படைக்கிறார்; ஆட்டுக் குட்டியையும், புலியையும் போல மக்களை சேர்ந்தாற்போல் சிருஷ்டி செய்துவிட்டு பிறகு நம்மைக் கண்டிக்கிறார்."

நெடுஞ்செழியன் அவர்களுக்கு வரவேற்பு

காந்தியார் படத் திறப்பு

20-4-54 பிற்பகல் 4-30 மணிக்கு மேட்டுப்பாளையம் (தஞ்சை) ஊராட்சி மன்றத்தாரால் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு வரவேற்பளிக்கப்படும். அதுசமயம், காந்தியார் படத்தைத் தோழர் நெடுஞ்செழியன் அவர்கள் திறந்து வைப்பார்,

மத்திய சர்க்காருக்கு வரி கொடோம்!

—o—

கிழக்கு வங்கத் தலைவர் முழக்கம்

கிழக்கு வங்கத்தில் வெற்றிக் கொடி நாட்டியுள்ள அவாமி முஸ்லீம் லீக் தலைவர் மௌலானா பாஷாணி, வரிகொடா இயக்கத்தின் மூலம், பாகிஸ்தான லீக் சர்க்காரை அடக்கத் திட்டமிட்டிருக்கிறார்.

பாகிஸ்தானின் ஒரு பகுதியான வங்கத்தில் லீக் படு தோல்வி அடைந்த பிறகு, பழய பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபை நீடிப்பது அபத்தம், உடனே அதைக் கலைத்துவிட வேண்டும், என்று பல தலைவர்கள் எடுத்துக் கூறியும் பாகிஸ்தான் லீக் சர்க்கார் கவனிக்க மறுத்துவிட்டது.

இனி மத்திய சர்க்காருக்கு வரி கொடுக்காமல், அதைப் பணிய வைக்க வேண்டும் என்று பாஷாணி கருதுகிறார்.

பாக்கு, புகையிலை, தேங்காய் ஆகியவைகளின்மீது மத்திய சர்க்கார் வரி வசூலிக்கிறது. கிழக்கு வங்கத்தில் இனி இந்த வரிகளை மத்திய சர்க்காருக்குத் தரக் கூடாது என்ற நோக்குடன், விரைவில் ஒரு வரிகொடா இயக்கம் துவக்கப் போவதாக, அவர், மாபெரும் பொதுக்கூட்டத்தில் தெரிவித்திருக்கிறார்.

கழகக் கூட்டங்கள்

★

சென்னை

அழகிரி நினைவு நாள்

18—4—54 மாலை 5 மணிக்கு

இடம் :

72, செல்லப்ப முதலி தெரு, குயப்பேட்டை

தலைவர் : இளம்பருதி

பேசுவோர் :

வி. எஸ். கோவிந்தராசன்

ஆர். டி. அரசு

செங்குட்டுவன்

எம். மூர்த்தி

★

பிரான்மலை

(அண்ணா மன்றம்)

19—4—54 மாலை 5 மணிக்கு

இடம்: தேரடி மைதானம்

தலைவர் : கா. ரேத்தினம்

பேசுவோர் :

இரா. நெடுஞ்செழியன்

ஞா. தியாக அரசு

சுப. முத்தசாமி இயக்கப் பாடல்கள் பாடுவார். மாலை 4 மணிக்கு ஊர்வலம் நடைபெறும்

★

மேட்டூர் அணை

19—4—54 மாலை 6½ மணிக்கு

பொதுஜன சேவா சங்கம்

பேசுவோர் :

ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ.

சிற்றணி—ஏ சுப்ரமணியம்

க. கு. சின்னுசாமி

★

மேட்டுப்பாளையம்

(தஞ்சை)

20—4—54 மாலை 6 மணிக்கு

இராயநல்லூர் (முள்ளியாற்றில்)

தலைவர் : வீ இராமலிங்கம்

பேசுபவர் :

இரா. நெடுஞ்செழியன்

இரவு 8 மணிக்கு, சேலம் சிற்றணி சுப்ரமணியம் குழுவினரின் 'கலா நிகழ்ச்சி' நடைபெறும்

★

மேட்டுப்பாளையம்

20—4—54 மாலை 6 மணிக்கு

பேசுவோர் :

மு கருணாநிதி

எம். ஜி. இராமச்சந்திரன்

ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ.

சொற் பயிற்சிக் கூட்டம்

18—4—54 காலை 10 மணியளவில், தி. மு. கழகம் 2-வது வட்டத்தின் சார்பில், ராயபுரம், பா. வி கோவில் தெரு, 79-ம் எண்ணுள்ள கழகக் கட்டிடத்தில் 'கடவுளும் மக்களும்' என்னும் பொருள் பற்றி சொற் பயிற்சிக் கூட்டம் நடைபெறும்.

மொழிப் போர் வெற்றி!

லீக் சர்க்கார் வழிக்கு வருகிறது

பாகிஸ்தானில், அரசாங்க மொழியாக உருதுதான் இருக்கும், வங்கமொழிக்கு அந்த நிலை தரப்பட முடியாது என்று லீக் சர்க்கார் முரட்டுப் பிடிவாதம் செய்து வந்தது. மொழி உரிமைக்காக வங்க மக்கள், குறிப்பாக மாணவர்கள் நடத்திய கிளர்ச்சி, லீக் எதிர்ப்பு உணர்ச்சியாக வளர்ந்து, கிழக்கு வங்க தேர்தலில், முஸ்லீம் லீக் படுதோல்வி அடையும் நிலைமை ஏற்பட்டது. இப்போது பாகிஸ்தான் சர்க்கார் வழிக்கு வருகிறது. வங்காள மொழியை பாகிஸ்தானின் தேசிய மொழிகளில் ஒன்றாக ஏற்றுக்கொள்வது என்றகருத்து, பாகிஸ்தான் பார்லிமெண்ட் முஸ்லீம் லீக் கட்சியிலே ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்னை சம்பந்தமாக மேலும் கால தாமதம் கூடாது என்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

பிரிட்டிஷ் கயானாவில் பேயாட்டம்!

பிரிட்டிஷ் கயானாவின் விடுதலை வீரரும், முன்னாள் முதலமைச்சருமான ஜகன் தடை உத்திரவு மீறியதற்காக ஆறுமாதம் தண்டனை பெற்றதைக் கண்டித்து ஜார்ஜ் டவுனில் ஒவ்வொரு நாளும் கண்டன ஊர்வலங்களும் கூட்டங்களும் நடைபெறுகின்றன. இவைகளைக் கலைக்க அடக்குமுறை வீசப்படுகிறது. அடக்குமுறையையும் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல், மக்கள் திரண்டு வந்து கண்டனம் தெரிவிக்கிறார்கள்.

'தண்ணீர்த் தேக்கத்தை உடைத்து, ஜார்ஜ் டவுனை மூழ்கடித்துவிட ஜகன் குழுவினர் சதி செய்கிறார்கள்,' என்று கூறிக் கொண்டு பிரிட்டிஷ் ஆட்சியினர் போலீஸ் நடவடிக்கையை மும்முரமாக்கி உள்ளனர்.

சென்னை சட்ட சபை மே 5-ந் தேதி கூடும்

சென்னை, ஏப். 16—

சென்னை சட்ட சபை மே 5-ந் தேதி கூடும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

புதிய மந்திரி சபை பதவி யேற்றபின் கூடப்போகும் இந்த சட்ட சபைக் கூட்டத்தில், கல்வி, நிதி அமைச்சர் சுப்ரமணியம் சட்ட சபை சர்க்கார் கட்சி தலைவராகலாமென்று தெரிகிறது.

சட்ட சபை கூடிய நாலைந்து நாட்களில் கூடப்போகும் மேல் சபைக்கு சர்க்கார் கட்சித் தலைவராக விவசாய மந்திரி பக்தவத்சலம் தலைவராகலா மென்றும் தெரியவருகிறது.

பாகிஸ்தானில் 'காங்கிரஸ்' முறை!

—:o:—

தேர்தலில் தோற்றால் கவர்னர் வேலை!!

கிழக்கு வங்க முதலமைச்சர் 'நூருல் அமின்,' லீக் அபேட்சகராக நின்று தேர்தலில் தோற்றார். இப்போது அவரை பஞ்சாப் கவர்னராக பாகிஸ்தான் சர்க்கார் நியமிக்கிறதாம்; அவரும் பதவிபெற இசைகிறாராம். இந்தியாவில் காங்கிரஸ்தான் இந்தக் கேவலமான போக்கைத் துவக்கி வைத்தது. தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட சந்தானம், குமாரசாமிராஜா ஆகியோர் கவர்னர்களாக்கப்பட்டது நேயர்கள் அறிந்ததே. இந்தக் காங்கிரஸ் முறையை, பாகிஸ்தான் பின்பற்றுகிறது!

இந்தியாவுக்கு ஆரியர்கள் வந்தது

திராவிடர்கள் மீது, வடக்கே இருந்து ஆரியர்கள் படையெடுத்து வந்தனர். மத்திய ஆசியாவில் இந்த ஆரியர்களின் ஜனத்தொகை ஏராளமாயிருந்திருக்க வேண்டும். அங்கே எல்லோருக்கும் போதிய உணவுப் பொருள் கிடைப்பது அரிதானமையால், அவர்கள் எல்லாம் வேறு தேசங்களில் பரவினர்.

வெகு நாட்கள் வரையில் ஆரியர்கள் வடக்கே பஞ்சாபிலும் ஆப்கானிஸ்தானத்திலும் தங்கி இருந்தனர். மெள்ள மெள்ள நாம் இப்போது வசிக்கும் ஐக்கிய மாகாணத்திற்குத் தெற்கு நோக்கி வந்தார்கள். இவ்விதமாக அவர்கள் காலடைவில், மத்திய இந்தியா முழுதும் பரவி, விந்தியமலைப் பிரதேசம் வரையில் ஆக்ரமித்துக் கொண்டார்கள். விந்திய மலைப் பிரதேசம் காடடர்ந்திருந்ததால் அதைத் தாண்டி, தெற்கே, அவர்களால் செல்ல முடியவில்லை. ஆகவே வெகு காலம் வரையில் ஆரியர்கள் விந்தியமலைக்கு வடக்கிலேயே வசித்து வந்தனர்.

"ஆரியர்கள் பஞ்சாபிலும், ஆப்கானிஸ்தானத்திலும் வசித்துவந்த காலத்தில் அதை 'பிரும்மாவர்த்தம்' என்று அழைத்தார்கள்."

—நேரு.

புதிய கல்லூரிகள்

ஈரோட்டிலும், தஞ்சாவூரிலும் கல்லூரிகள் புதிதாக அமைக்கும் ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

ஈரோடு கல்லூரி கட்டப்படுவதற்கான இடத்தைக் காணவும், அமைப்பாளர்களைக் கலந்து பேசவும், சென்னை பல்கலைக் கழகக் கமிட்டியார் சென்ற கிழமை ஈரோடு வந்திருந்தனர்.

ஈரோடு கல்லூரிக்கு, பெரியார், ஒரு பெருந்தொகை தருவதாக வாக்களித்துள்ளார்.

அமெரிக்கர் இறக்குமதி

பாகிஸ்தான் திட்டக் கமிட்டியில் கீழ்திருத்த ஆலோசனை கூற 12 அமெரிக்க நிபுணர்கள் வந்துள்ளனர்.

கொடிக்கால் உழவர் படும் துயரம்

—(:)—

பூச்சி, பயிரை அழிக்கிறது — வறுமை, உழவனைக் கொட்டுகிறது!

அமைச்சர்களிடம் முறையிட்டு பயன் இல்லை

புதியவருக்காவது மனம் இளகுமா?

சேலம் மாவட்டம், வேலூர் வட்டாரத்திலுள்ள வெற்றிலைப் பயிரிடுவோருக்குள்ள அல்லல் பற்றி ஆளவந்தார்கள் கவனித்தாக வேண்டுமென்று, போத்தனூர் தோழர் இரா. சண்முகம் கேட்டுக்கொண்டுள்ளார்;—

சேலம் மாவட்டத்தின் காவிரி பாயும் பிரதேசமான நாமக்கல் வட்ட. தென் பகுதியிலிருக்கும் பொத்தனூர், பாண்டமங்கலம், வேலூர், மோகனூர் ஆகிய பெருங் கிராமங்களும், திருச்சி—சரூர் வட்ட புகளூர் சுற்றுப் பகுதிகளும் வெற்றிலைத் தொழில் ஒன்றையே நம்பி உயிர் வைத்திருப்பனவாகும்.

இந்திய துணைக் கண்டம் முழுவதும் அனுப்பப்படுவதால் ரயில் மூலமாகவும், பாகிஸ்தான், இலங்கை, மலேயா, பர்மா ஆகிய வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுவதால் விமானம், கப்பல் மூலமாகவும், வணிகப் பொருளாதலால் வரி மூலமாகவும் வெற்றிலை அரசாங்கத்திற்கு கல்லதொரு வருமானத்தைக் கொடுத்து வருகிறது.

இத்தொழிலால் இப்பகுதி மூலமாக மட்டும் ஆண்டொன்றுக்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேலாக 'செலாவணி' ஆகிறது.

வெற்றிலை பயிரிடுவதால் நிலத்தின் தரமும், வளமும் உயர்ந்து வருகிறது.

இதன் காரணமாக இப்பகுதியிலிருக்கும் நன்செய் நிலம் ஒரு ஏகர் 20 லிருந்து 25 ஆயிரம் ரூபாய்வரை விலைபோகிறது.

வெற்றிலைக் கொடிக் காலில் நாள் ஒன்றுக்கு ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட ஆண்களுக்கும் பெண்களுக்கும் வேலையிருக்கிறது.

ஒரு ஆண்டுக்கு ஒரு ஏகர் கொடிக்காலுக்கு 'முட்டுவழிச் செலவு' ரூ. 7,000 ஆகிறது. ஒரு ஆண்டுக்குப் பிறகுதான் பலனை எதிர்பார்க்க முடியும். வெற்றிலை இரண்டரை ஆண்டுப் பயிராகும்.

ஆனால் கடந்த மூன்றாண்டுகளாக வெற்றிலைத் தொழிலுக்கு நலிவு ஏற்பட்டுள்ளது. செழித்து வளர்ந்து பலன் தரும் காலத்தில் வெற்றிலைக் கொடி திடீரென காய்ந்து வருகிறது. இதனால் உற்பத்தியாளர்கள் பாடுபட்டும் பலன் காணாதவர்களாக விளங்குவதோடு கடனாளிகளாகி, மனைகளை ஜப்தியில் இழக்க நேரிடுகிறது.

சிறு வியாபாரிகள், லேவாதேவி இலாகாவினரால் தொல்லைகளுக்குள்ளாகி ஊரைவிட்டு ஓடி மறைந்து வாழும் நிலையிலிருக்கின்றனர். இதன் புள்ளி விவரங்கள் அரசாங்க இலாகாக்களில் இருக்கின்றன.

கோவை விவசாய உதவி டைரக்டரும், சேலம், திருச்சி மாவட்ட விவசாய அதிகாரிகளும் கவனித்துபோன கொடிக்காலைப் பார்வையிட்டு, இது ஒரு தொத்து நோய் என்றும், இரண்டொரு மருந்து வகைகளைத் தெளித்து நிலைமையைச் சமாளிக்கும்படியும் கூறிச் சென்றனர். அவர்கள் கருத்தப்படி மருந்து வகைகளைத் தெளித்தும் பயனில்லாமற் போய்விட்டது.

இக்குறைபற்றி முன்னாள் முதலமைச்சர் ஆச்சாரியார், ஜோதி வெங்கடாசலம், முன்னாள்-இந்நாள் அமைச்சர் பக்தவத்சலம், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் காமராஜ் (இந்நாள் முதலமைச்சர்) ஆகியோருக்கு இப்பகுதி வாழ் மக்கள் வரவேற்பு மூலமாகவும், மகஜர் மூலமாகவும் எடுத்துரைத்து, குறையை நீக்க வேண்டுமென வேண்டிக் கொண்டனர். அமைச்சர்கள் கவனித்ததாகத் தெரியவில்லை. அமைச்சர்கள் ஆணையிட்டும் பலன் இன்னும் ஏற்படவில்லை.

முதலமைச்சர் காமராஜ் அவர்கள் இதுபற்றி முன்னரே தெரிந்திருப்பதால், உடனடியாக வெற்றிலைத் தொழிலுக்கேற்பட்டுள்ள நலிவை நீக்க முற்படுவார் என இங்குள்ள மக்கள் எதிர்பார்க்கின்றனர். காமராஜ் கவனிப்பாரா?

இந்தியாவுக்கு வந்த ஆரியர்கள் நிலை

தாங்கள் மேலானவர்கள் என்ற கர்வத்தால் ஆரியர்கள், இந்தியாவில் வசித்த மற்ற ஜாதியாருடன் கலந்துகொள்ளவில்லை. ஆரியர்கள் மற்ற ஜாதியாரோடு கலக்காமல் இருப்பதற்காக பல சட்டங்களையும், விதிவிலக்குகளையும் ஏற்படுத்தினார்கள். வெகு காலத்திற்குப் பின்பு இதன் காரணமாக வர்ண பேதங்கள் ஏற்பட்டன. இக்காலத்தில் உள்ள ஜாதி, வகுப்புகள் இதனால் உண்டானவைகளே. இவ்வித்தியாசங்களெல்லாம் இக்காலத்தில் விபரீதமாகி மாறிவிட்டன. பிறரைத் தீண்டுவதும் மற்றவர்களோடு சாப்பிடுவதும் சிலருக்கு பயமாயிருக்கிறது. நல்லகாலமாக இவ்வித்தியாசங்களெல்லாம் குறைந்துகொண்டே வருகின்றன."

—நேரு.

★

இராமாயணமும் மகாபாரதமும்

உண்மையை உரைக்குமிடத்து இராமாயணக் கதையானது ஆரியர்கள் தென்னாட்டின்மீது படை எடுத்துச் சென்றபோது அவர்களுக்கும் திராவிடர்களுக்கும் நடந்த சண்டையைப் பற்றிக் கூறுகிறதென்று சொல்லலாம். திராவிடர்களில் ஒரு வகுப்பாரை 'வானரர்கள்' என்று அழைத்தார்கள் போலும்!

—நேரு.

மதம் ஒரு குருட்டு நம்பிக்கை!

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

றான். மதபக்தன், தான் என்ற மமதையைப் போக்கிக் கொள்ள முயலுகிறான். ஆனால், அந்த முயற்சியினாலேயே, அவனுக்கு அதிகமான அகம்பாவம் ஏற்பட்டுவிடுகிறது. ஜன சமூகத் தேவைகளுக்குத் தகுந்தாற்போல், தர்ம சாஸ்திரங்களையும் சட்டதிட்டங்களையும் ஏற்படுத்திக்கொள்ளாமல் பாபம் புண்ணியமென்று ஓர் அறிவுக்கெட்டாத தத்துவத்தை ஏற்படுத்தி அதன் பேரில தர்ம சாஸ்திரம் ஆக்கப்படுகின்றது. அமைப்பாகக் கட்டுப்படும் மதம் இறுதியில் சொத்துரிமைச் சங்கமாக ஆகிவிடுகின்றது. எனவே, மாறுதலையும் அபிவிருத்தியையும் எதிர்க்கும் பிற்போக்கான சக்தியாக அது உருவெடுத்து விடுகின்றது."

★

மதத்திற்கு ஒரு பொருளுண்டா?

"மதம் என்ற சொல்லைக் கேட்டவுடனே, ஒருவகை வலுவான உணர்ச்சிப் பெருக்கு ஏற்பட்டு விடுகிறது. அப்பொழுது நிதானம் தவறிப்போய், எதையும் நேர்மையான முறையில் யோசிப்பதற்கு சாத்தியப்படுவதில்லை. மதமென்ற சொல், அதனுடைய உண்மையான அர்த்தத்தை இழந்து விட்டது. எப்பொழுதேனும் அந்தச் சொல்லுக்குத் திட்டமாக ஒரு பொருள் உண்டோ என்பது சந்தேகம். திட்டமான பொருளில்லாததால், குழப்பம் உண்டாகின்றது. முடிவில்லாத கட்சியும் வாதங்களும் கிளம்பி விடுகின்றன. எதனாலே? ஒருவர் சொல்லுகிற அர்த்தத்தில் மதமென்ற சொல்லை இன்னொருவர் எடுத்துக்கொள்வதே இல்லை. அந்த வார்த்தையை உபயோகப்படுத்தாமல், அடியோடு விலக்கி விடுவது நல்லதென்று தோன்றுகிறது. மதம் என்ற சொல்லுக்குப் பதிலாக, குறுகிய நிச்சயமான அர்த்தங்கொண்ட வேறு பல சொற்களை உபயோகப்படுத்தலாம். உதாரணமாக வேத நூல் தத்துவம், தர்மசூத்திரங்கள், நெறிமுறைகள் அதயாத்மிகத் தன்மை, வேதாந்தம், கடமை, கிரியை என்ற சொற்களை உபயோகப்படுத்தலாம். இந்த சொற்கள்கூட சந்தேகாஸ்பதமாக இருக்கின்றன."

★

மக்களின் இழிவுக்கு மதம் ஒரு மார்க்கம்

"மதம் என்ற சொல்லை உபயோகப்படுத்துவதினால், பல கெடுதிகள் ஏற்படுவது ஒருபுறமிருக்க, மதம் என்பது என்ன என்று ஆராய்ச்சி செய்வோம். நல்லது என்று கருதப்படும் பாதையில் ஒரு மனிதனுடைய ஆத்மா அபிவிருத்தி அடைவது என்பதைத்தான் மதமென்று சொல்லலாம். மதமென்பது, ஒவ்வொருவருடைய உள் வளர்ச்சியாகும். அந்தப் பாதை, எதுவென்பது வாதத்திற்கிடமாகும். எனக்குத் தெரிந்தவரையிலும், மதம இந்த உள் மாறுதலைத் தான் வற்புறுத்திச் சொல்லுகின்றது. வெளி மாறுதல்கள், உள் அபிவிருத்தியின் படைகளாகக் கருதப்படுகின்றன. இந்த உள் அபிவிருத்தியால் வெளி வாழ்க்கை மிகுதியும் பாதிக்கப்படுகிறதென்பதில் சந்தேகமே இல்லை. ஒரு மனிதனுடைய சுற்றுப்புறத்தால் அவனுடைய உள் வளர்ச்சியும் பாதிக்கப்படாமலிருக்க முடியாது. சோற்றுக்குத் திண்டாடுகிற ஒருவன் ஜீவனப் போராட்டத்தில் அங்குமிங்கும் அலைக்கப்பட்டு சீ குலைந்து நிற்கும் ஒருவன் உள்ளத்தில் உயர்ந்த நிலையை அநேகமாகப் பெறமுடியாது. சதா பணம் சுரண்டப்பட்டு அமுத்தி மிதிக்கப்பட்டுக் கிடக்கும் கூட்டமும் உள்ளத்தில் முன்னேற்றமடைய முடியாது."

தெளிவான அறிவும் சிதறிவிடும்!

"பல பொருள்களில் மதம் என்ற இந்த ஒரு சொல்லை உபயோகப்படுத்துவதனால் தெளிவான அறிவு ஏற்படாமலே போய்விடுகின்றது. ஆச்சாரிய ஜான் டூயி என்பவர் புதிதாக மதத்துக்குப் பொருள் கொடுத்து, அதற்கு எல்லை கட்டியிருக்கிறார். அந்தப் பொருளை சமய பக்தர்கள் ஏற்கமாட்டார்கள். துண்டு துண்டாக சிதறிக் கிடந்து அடிக்கடி மாறிக்கொண்டு செல்லும வாழ்க்கையின் நிகழ்ச்சிகளுக்கு நிலைத்த லட்சியம் ஒன்றைக் கொடுப்பது மதம் என்று அவர் சொல்லுகிறார். தனது லட்சியம் நித்திய பொருளென்று நம்பி எத்தனையோ இடையூறுகள் குறுக்கிட்டாலும் லட்சியத்தின் பொருட்டு வினையாற்றுவதும் எல்லா கஷ்ட நஷ்டங்களையும் பொருட்படுத்தாமலும் இருக்கும் மனப்பான்மை, மதத்தைச் சார்ந்ததென்றும் கூறியிருக்கிறார். லட்சியத்தைக் கைவிடாமலும் இருப்பது மதமாகுமானால், மதத்தைப்பற்றி யாருக்குமே கொஞ்சம் கூட ஆட்சேபனை இருக்காது."

★

பரலோக மொழியில் பேசுகிறது மதம்!

"என் உள்ளத்தில் குவிந்துகிடந்த கோபத்தில் ஒரு பகுதி மதத்தின் பேரிலும், மத நோக்கின் பேரிலும் பாய்ந்தது. கருத்துத் தெளிவுக்கும் காரிய உறுதிக்கும் மதம் ஒரு எதிரியல்லவா என்று நினைத்தேன். மதத்துக்கு ஆஸ்திவாரமே உணர்ச்சியும் வெறியும் அல்லவா? மதம் ஆன்ம சம்பந்தமானது என்று சொல்லப்படுகிறது. ஆனால் உண்மையான ஆன்ம சம்பந்தமான பொருள்களுக்கும் அதற்கும் எவ்வளவு தூரம்! அது எப்பொழுதும் பரலோக வாழ்வையிலேயே யோசனை செய்கிறது. எனவே, ஜன சமூக நியாயம், மனித வர்க்கத்தின் அளவுகள், ஜன சமூக அளவுகள் இவைகளைப்பற்றிக் கவனிப்பதே இல்லை. அது முன்கூட்டியே முடிவு செய்துகொண்டு நடக்கிற நிகழ்ச்சிகளைப் பார்க்காமல் கண்ணை மூடிக்கொள்ளுகிறது. அதற்குப் பயம்; விஞ்ஞானின் நடைமுறைச் சங்கதிகளைப் பார்த்தால் அது தான் ஏற்கனவே கொண்டுள்ள கருத்துக்களுக்கு ஒவ்வாமல் போனால் என்ன செய்கிறதென்று பயம்."

★

பேசுவது சத்தியம்! செய்வதோ......!

"மதத்துக்கு அஸ்திவாரம் சத்தியம் என்று சொல்லப்படுகிறது. இந்த சத்தியத்தை அது முழுதும் கண்டுபிடித்து விட்டதாக நினைத்துக்கொண்டு உண்மையை நாடுவதற்கு கவலைப்படுவதேயில்லை. 'உண்மையை நாடுங்கள்' என்று பிறருக்கு போதிப்பதுதான் அதனுடைய வேலையாகும். சத்திய சோதனைக்காக செய்துகொள்ளும் சங்கற்பமும், நம்புவதற்காக செய்துகொள்ளும் சங்கற்பமும் ஒன்றாக மாட்டா. மதம் அமைதியையும் சமாதானத்தையும் பற்றிப் பேசுகிறது. இருந்தாலும் பலாத்காரத்தைக் கொண்டு பாதுகாத்தாலொழிய நிலைத்துநிற்க முடியாத திட்டங்களையும் அமைப்புகளையும் அது ஆதரிக்கின்றது. அது கத்தியின் பலாத்காரத்தைக் கண்டிக்கிறது. ஆனால் சாந்தமாயும் அமைதியுடனும் நடந்து பட்டினி போட்டுக் கொல்லும்படியான அதன் அந்த பலாத்காரத்தைப்பற்றி என்ன சொல்லுகிறது? தோற்றத்திலே உடம்பிலே காயம் உண்டாக்காமலே மனதைத் தாக்கி ஆன்மாவை யழித்து உள்ளத்தை உடைக்கும் அந்தப் பரம சாதுவான பலாத்காரத்தைப் பற்றி என்ன சொல்லுகிறது?

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

மதுராமேட்டூரில் தி. மு. கழகத் திறப்பு விழா

10—4—54 மாலை 7 மணிக்கு தோழர் ஆ. துரைசாமி தலைமையில் திரு. எம். பி. சுப்பிரமணியம் எம். எல். ஏ., அவர்களால் கழகக் கொடி ஏற்றி வைக்கப்பட்டு, தோழர் சிற்றுணி—சுப்பிரமணியம் அவர்களால் கழகம் திறந்து வைக்கப்பட்டது. அரசியல், சமூகம், மூடநம்பிக்கை ஆகியவைகள் பற்றி தோழர்கள்: எம். பி சுப்பிரமணியம், சிற்றுணி சுப்ரமணியம், என். கே. ராசு, அன்பழகன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பின்னர் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—ஆ. துரைசாமி—செயலாளர்; செ. சின்னசாமி—துணைச் செயலாளர்; கா. அப்பாவு—பொருளாளர்; மாவட்டப் பிரதிநிதி — பெரியசாமி; வட்டப் பிரதிநிதி—பழனிமுத்து; மற்றும் 11 பேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திராவிட முன்னேற்றக் கழகத் அச்சக தோழர் இரா.நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.,